03 DEC 1992

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2203    கார்த்திகை 03    (18-11-1992)    புதன்கிழமை    ஒசை 274

## 6954 பட்டதாரிகளுக்கு பயிலுனர் ஆசிரியர் நியமனம்

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாக தெரியவருகிறது. 18-10-91 அன்று வர்த்தமானி அறிவித்தல் மூலம் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இப் பரீட்சைக்கு 7954 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்த போதும் இவர்களில் பெறுபேறுகளின் அடிப்படையில் 1000 பேருக்கே அண்மையில் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டிருந்தது. தற்போது மிகுதி 6954 பேருக்கும் பட்டதாரி பயிலுனர் ஆசிரியநியமனம் வழங்கப்படஉள்ளதாகவும் தெரியவருகிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

# குண்டு வெடிப்பால் கொழும்பில் பதற்றம்; பிரேமா அரசை பதவி விலக கோரிக்கை

## வீரவிடுதலைப்படை முன்னே கூலிப்படை திணறுகிறது

எதிரிப் படையிலிருந்து நழுவி நழுவி ஓடுகின்றார்கள் சிப்பாய்கள், எதிரியே ஏற்றுக் கொள்கின்றான். ''புலிகளை வெல்வது கடினம்'' உணர வைத்தவர்கள் எங்கள் மாவீரர்கள். இவ்வாறு மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரி மெல்ல மெல்லப் பின் வாங்குகின்றான், உயிரினும் மேலாய் சுதந்திரத்தை வைத்தெண்ணும் வீர விடுதலைப் படை முன்னே கூலிப்படை முகம் கொடுக்க முடியாது திணறுகிறது. இந்தப் புனிதப் போர்ப்படை விதையாகிப் போன எம் மாவீரர்களின் மூளைகளாற் சட்டி எழுப்பப் பெற்ற மறவர் படை. இதன் முன்னே எதிரியின் கனரகப் போர்க் கருவிகளாலும் நின்று பிடிக்க முடியவில்லை, உண்மையே, எம்மாவீரர்களின் இறப்பு வெறும்அர்த்தமற்ற இழப்பல்ல வீரத்தின் உயிர்ப்பு.

இந்த மாவீரர்களின் வீழ்கையில் எமது வரலாறு எழுந்து கொண்டது. சாவிலே சரித்திரம் புடம் போடப்பட்டது. இந்த வீரச்சாவுகள் உயிர்ப்புள்ள ஒரு தேசிய கீதத்தை உலகிற்கு அறிமுகப் படுத்துகின்றன.

மாவீரர் தம் இறுதி மூச்சு ஒவ்வொரு தமிழீழக் குடிமகனினதும் உயிர் மூச்சாய்க் கலந்து நிற்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வன்னி மாவட்டத்தில் மாவீரர்தின ஏற்பாடுகள்

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டத்தில் மாவீரர் தினத்தையொட்டிய முன் ஏற்பாடுகள் யாவும் மக்களை மிகவும் கவரத்தக்க வகையில் துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

வர்த்தகர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிராமிய உற்பத்திக்குழுக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் போன்றன மாவீரர் தினத்தையொட்டி; வீதிகளைச் சுத்தம் செய்தல், பொது இடங்களை அலங்கரித்தல், வீதிவளைவுகளைத் தயாரித்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றார்கள்.

பரந்தன் சந்தியில் இருந்து பிரதான வீதி ஓரங்கள் யாவும் தொடர்ச்சியாக கம்பங்கள் நட்டப்பட்டு வீதியினை அலங்கரிக்கும் பணியில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டுள்ளார்கள்.

முக்கியமாக கிளிநொச்சி [4 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு அதிகாரிகளும் பதவி விலக வேண்டுமாம்

(கொழும்பு)

கடற்படைத்தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டமைக்குப் பொறுப்பேற்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும், பாதுகாப்புத் தொடர்பான அனைத்து அதிகாரிகளும் பதவி விலகவேண்டும் என எதிர்க்கட்சிகள் பல கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை, குண்டு வெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து கொழும்பிலும், அதன் சுற்றுப்புறத்திலும் பதற்றம் நிலவுவதாகவும், பாதுகாப்பு ஏற்பாடுகள் அப் பகுதியில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிககின்றன.

இந்த தற்கொலைத் தாக்குதலினால் யுத்தம் மிகவும் தொலை தூரம் செல்லும் ஒரு கொடிய நீண்ட பயணம ஆகத் தெரிகிறது. கொழும்பில் கூட பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாத இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவித்தார். இனியும் இந்த அரசாங்கம் தனது பதவியைக் காத்துக் கொள்ள எத்தனிக்கக்கூடாது என மேலும் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சி. பி. டி. சில்வா இது குறித்துக் கருத்து வெளியிடுகையில் உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றால் அதற்குப் பொறுப்பானவர்கள் உடனடியாகப் பதவி விலகுவார்கள். எனவே பாதுகாப்பு தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும், அமைச்சர்களும் பதவி விலக வேண்டும்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாத அரசாங்கம் பதவியிலிருக்க தகுதியற்றது. இச்சம்பவம் தற்போதுள்ள பயங்கர நிலையைக் காட்டுகிறது. எனவே உடனடியாக அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்றார்.

இதேவேளை கடற்படைத் தளபதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டமை யுத்தத்தை இன்னும் தொலை தூரத்திற்கு இட்டுச்செல்லும் என ''டெயிலிநியூஸ்'' செய்தி [4 ஆம் பக்கம் பார்க்க]

### கடற்படைத் தளபதி மரணவிசாரணை

## இராணுவ உயர் அதிகாரியை நீதிமன்றத்திற்குவர உத்தரவு

(கொழும்பு)

வெடிகுண்டுத் தாக்குதலில் சிறிலங்காவின் கடற்படைத் தளபதி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சிறிலங்காவின் உயர் இரா

கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோவினது கொலை தொடர்பாக மரணவிசாரணை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரியினது அறிக்கையை

படைத் தளபதி கொலை செய்யப்படுவதற்கு சற்று முன்னர் காரில் சென்று கொண்டிருந்த சாயம் பிரஸ்தாப உயர் இராணுவ அதிகாரி வாகனமொன்றை வேக

# மணலாற்றில் புலிகள் திடீர் தாக்கு;

சிறிலங்காவின் உயர் இரா ணுவ அதிகாரி ஒருவரை நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு நீதி மன்றத்தினால் அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரியினது அறிக்கையை ஆழமாக ஆராய்ந்த கொழும்பு கோட்டை நீதிமன்றம மேற்படி அவசர உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

நேற்று முன்தினம் கடற்

...ரி வாகனமொன்றை வேக மாக ஓட்டிச் சென்று கடற் படைத் தளபதியின் வாகனத் தை விலத்திச் சென்றதாக மரண சாரணை அதிகாரியி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# 4 ராணுவத்தினர் பலி; பலர் காயம்

(மணலாறு)

மணலாறு பகுதியில் அமைந்துள்ள சிலோன் தியேட்டர் இராணுவ முகாம் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் சில ஆயுதங்களும், ராணுவ பொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன

நேற்று முன்தினம் இரவு 9.40 மணியளவில் மேற்படி இராணுவ முகாமிற்கு அண்மையில் அமைந்திருந்த நான்கு காவலரண்கள் மீதே விடுதலைப்புலிகள் இத்திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் இருபது நிமிடம்வரை நீடித்த மேற்படி தாக்குதலின் போது சிறிலங்கா இராணுவத்தினர் தரப்பில் நான்குபேர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்த நிலையில் முகாமிற்குள் தப்பி ஓடி விட்டனர்.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | | | |
|---|---|---|---|
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி ரக துப்பாக்கி | — 01 | ★ ஜே.ஆர் கைக்குண்டு சிறியது | — 02 |
| ★ ரி 56-2 ரக துப்பாக்கி | — 01 | ★ ஜே ஆர். கைக்குண்டு பெரியது | — 02 |
| ★ ரி 56 1 ரக துப்பாக்கி | — 01 | ★ ஏ.கே. கோல்சர் | — 04 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி ரம் மகசின் | — 01 | ★ தலைக்கவசம் | — 05 |
| ★ ரி 56 மகசின் | — 10 | ★ சப்பாத்து (சோடி) | — 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — 876 | ★ ராணுவபட்டி | — 01 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி லிங்குகள் | — 263 | ★ மழை பாதுகாப்பு அங்கி | — 01 |

## 2 வேங்கைகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் மணலாறு பகுதியில் சிலோன் தியேட்டர் இராணுவமுகாமிற்கு அண்மையில் அமைந்திருந்த காவலரண்கள் மீதான தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்டினன்ட் கரிகாலன் (ஆறுமுகம் சாந்தகுமார், முதலாம யுனிட், சேமமடு வவுனியா), வீரவேங்கை அண்ணாத்துரை. (சரவணமுத்து காந்தரூபன், 6-ம் வட்டாரம், குமிழமுனை, முள்ளியவளை,

[4 ஆம் பக்கம் பார்க்க]



லெப். கரிகாலன்



வீரவேங்கை அண்ணாத்துரை

## கடற்படையினர் சூடு ஒரு மீனவர் படுகாயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் இன்பருட்டிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டு மீனவர்களை நோக்கி ரோந்து சென்ற கடற்படையினர் சரமாரியாகச் சுட்டதில் ஒரு மீனவர் காலில் படுகாயமடைந்தார். மற்றவர் கடலில் குதித்து மயிரிழையில் தப்பினார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7.00 மணியளவில் இன்பருட்டிப் பகுதியில் வைத்து நிகழ்ந்தது

மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து முனையில் அகதிகளாக தங்கி வரும் மேற்படி மீனவர்களில் சூசையப்பு-அருமைநாயகம் (வயது 30) என்பவர் கால் முறிந்த நிலையில் படுகாயமுற்று அவசர சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

அவருடன் சென்ற பிரான்சிஸ் - ஜஸ்ரின் (வயது 29) என்பவரே மயிரிழையில் தப்பியவர் ஆவர். இவர்களது மீன்பிடி வலையையும் கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

அதனையடுத்து வெற்றிலைக்கேணிப் பகுதியை நோக்கிக் கடற்படையினர் சென்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரு தமிழ்ச் சிறுவர்கள் பொலிசாரால் கைது

பொலனறுவை பொலிசார் பத்தொன்பது வயதுக்குட்பட்ட இரண்டு தமிழ் சிறுவர்களை கடந்த சனியன்று கைது செய்துள்ளனர். பொலனறுவ பகுதியில் குண்டு வெடிக்கச் செய்வதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்தசெய்திகளை அடுத்து பொலிசார் உஷார்ப்படுத்தப் பட்டிருப்பதாக மேலும் கூறப் படுகின்றது.

## தளபதிகளின் பாதுகாப்பிற்கு புதிய ஏற்பாடுகள் செய்யமுடிவு

[கொழும்பு]

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் கடற்படைத்தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டதைத் தொடர்ந்துமுப்படைத் தளபதிகள் மற்றும் படை உயர் அதிகாரிகளின் பாதுகாப்பு தொடர்பாக புதியசெயல் திட்டங்கள் வகுக்கப்பட உள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

தளபதிகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் விசேட இலச்சினை பொறித்த வாகனங்கள்வழங்கப்படும்என்றும், இவ் வாகனங்களை முந்திச் செல்லவோ அல்லது அவற்றுக்கு அருகில் செல்லவோ ஏனைய வாகனங்களுக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தீவிர ஆலோசனைக்கு பின் நியூ. அணி விளையாட முடிவு

கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆட்டத்தை இடை நடுவில் கைவிட்டு நாடு திரும்பவிருந்த நியூசிலாந்து கிரிக்கெட் அணி அதன் தீர்மானத்தை மாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் நியூசிலாந்து அணி தொடர்ந்து பங்குபற்றும் என்று நியூசிலாந்து கிரிக்கெட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மருத்துவபீட மாணவர் இன்று முதல் பகிஷ்கரிப்பு

யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக இன்று முதல் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளனர்.

மருத்துவ பீடத்தின் அனைத்து மாணவர்களும் இன்று முதல் தமது சகல விரிவுரைகளையும் செய்முறைப் பயிற்சி வகுப்புக்களையும் பகிஷ்கரிக்கவுள்ளனர்.

மருத்துவ பீட மாணவர் ஒருவர் கடந்த மூன்றாம் திகதி முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபிக்கும் முகமாக இப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்று ஆரம்பமாகிறது. இப் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்பான முடிவு மருத்துவ பீட மாணவ பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது இப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மருத்துவபீட மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

**அன்னையர்க்கு ஆயுதப்போராகுமோ என்றன்று சொன்னவரைப் பழித்தாள் எம் சோதரி**

## வரி விளம்பரம்


### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ் வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப.

(3215)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி 5399)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5109)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி-5400)

### விற்பனைக்கு

பன்டேஜ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. ஆதவன் மருந்தகம், கைதடிச் சந்தி.

(சி-3222)


## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுள் தவறி விழுந்ததினால் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். இராசாவின் தோட்டம் பகுதியைச் சேர்ந்த செ. லோறன்ஸ்பாலா (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவன் ஆவான். கடந்த ஞாயிறு நண்பகல் தொடக்கம் சிறுவனைக் காணாது பெற்றோர் தேடியதாகவும்இறுதியில் நேற்றுமுன்தினம் இப்பகுதியில் உள்ள கிணறொன்றில் கிடந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

(22)

## வங்கக் கடலில் மீண்டும் புயல் சின்னம்

வங்காள விரிகுடாவிற்கு தெற்கே மற்றுமொரு புயல் சின்னம் உருவாகியிருப்பதாக வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது. இலங்கையின் கிழக்குகரையோரத்திலிருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருக்கும் இப்புயல்சின்னம் மேலும் தீவிரமடைந்து வடமேற்கு திசையில் நகர்ந்து செல்லும் எனவும், இலங்கையின் வானிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் கூறப்படுகிறது.

## இடமாற்றம்

யாழ். கல்வித்திணைக்களத்தில் எழுதுனர்களாக கடமையாற்றும் மூவர் திருக்கோணமலை வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு மாசி 1993 இல் இருந்து இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இதே சமயம் திருக்கோணமலை வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்துஒருவரும், வவுனியாகல்வித் திணைக்களத்தில் இருந்து ஒருவரும் மாசி 1993 இல் இருந்து யாழ். கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கான இடமாற்ற கடிதங்கள் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(17)

# தனியார்துறை ஊழியருக்கு சம்பளஉயர்வுபற்றி ஆராய்வு

(கொழும்பு)

அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் அளித்த 30 சத...

அரசாங்கத்துறை ஊழியர்களுக்கு 30 சதவீத சம்பள உயர்வு...

# எழுச்சிவார கருத்தரங்குகள்

மாவீரர்கள் நாள் எழுச்சி வார கருத்தரங்கின் நான்காம் நாள் நிகழ்வுகள்;

வலிகாமம் கோட்டத்தில் சங்கானை வட்டத்தில் சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்திலும். கோப்பாய் வட்டத்தில் சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்திலும், சண்டிலிப்பாய் வட்டத்தில் நவாலி வடக்கு சனசமூக நிலையத்திலும், உடுவில் வட்டத்தில் கல்லாக்கட்டுவன் காந்தரூபன் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 6-30 மணியளவில் அவ்வப்பகுதி சிற்றூர்ப் பொறுப்பாளர்களின் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெற உள்ளது.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் இரவு 7-30 மணியளவில் வல்வெட்டித்துறை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தமிழரசன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தணிகைச்செல்வி, மகான் ஆகியோர் உரையாற்றுவர்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில் இரவு 7-30 மணியளவில் லெப். அருள் சனசமூக நிலையத்தில் யோக்கின் தலைமையில் அன்பு உரை நிகழ்த்துவார். கொடிகாமம் வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் கொடிகாமம் கோயிலாமணி சனசமூக நிலையத்தில் வாசு தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அனந்தா உரையாற்றுவார். பளை வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் சதாபுரம் உதயதாரகை சனசமூக நிலையத்தில் கேசன் தலைமையில் தமிழ்மங்கை அவர்கள் உரையாற்றுவார்.

சாவகச்சேரி வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் மீசாலை விக்கினேஸ்வரா பாடசாலையில் அன்புடைநம்பி தலைமையில் கோபால், தமிழ்மங்கை ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

தீவகம் கோட்டத்தில் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இரவு 7 00 மணியளவில் அரியாலை சாம்சன் முகாமில் சுபாஸ் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சேரலாதன், அன்பரசி ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

கடற்புலிகளினால் வடமராட்சி கிழக்கு தாளையடி வட்டத்தில் பிற்பகல் 5 00 மணியளவில் அம்பன் அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும், வடமராட்சி வடக்கு வட்டத்தில் முற்பகல் 10. 00 மணியளவில் பொலிகண்டி கிழக்கு மடத்தடி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 4.00 மணியளவில் சக்கோட்டை சனசமூகநிலையத்திலும், வலிகாமம் கிழக்கில் பிற்பகல் 4. 00 மணியளவில் வில்லூண்டிப் பிள்ளையார் கோவிலடி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 5-00 மணியளவில் சென் நிக்களஸ் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 6.00 மணியளவில் சென்மேரிஸ் சனசமூக நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

மாவீரர் எழுச்சி வாரம்
நான்காம் நாள்
நிகழ்ச்சிகள்

## மாவீரர்எழுச்சிவார 4-ம் நாள் சிரமதானப் பணிகள்

மாவீரர் எழுச்சி வாரத்தின் நான்காம் நாள் சிரமதானப் பணிகள் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன.

தீவகம் கோட்டத்தில் அரியாலை சாம்சன் முகாம் (முகாம் துப்புரவு பாலம் அமைப்பு) திரு. சுபாஸ் தலைமையில் முகாம் மக்களால் துப்புரவு செய்யப்பட உள்ளது.

வடமராட்சிக் கோட்டத்தில் அச்சுவேலி வட்டத்தில் பஸ் நிலைய சந்தை வளவை அருட்செல்வம் தலைமையில் அச்சுவேலி மக்கள், வர்த்தக சங்கத்தை சேர்ந்தவர்களும் இணைந்து துப்புரவு செய்ய உள்ளனர்.

வலிகாமம் கோட்டத்தில் சங்கானைவட்டத்தில் தொல்புரம் மேற்கு சனசமூக நிலைய வீதியும் துப்புரவு செய்யப்படும்.

கோப்பாய் வட்டத்தில் றோகன் வீதி, குறுக்கு வீதி என்பன நீர்வேலி சிற்றூர் மக்களால் சிரமதானம் செய்யப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் தாவடி விழிசிட்டி கிராமம், காளியம்மன் நிலையத்தடி, சனசமூக நிலையம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படும்.

வலிகாமம் கிழக்கு கோட்டத்தில் குருநகர் வீதியும், வாய்க்காலும் துப்புரவு செய்யப்படுவதுடன் பற்றிக்ஸ் வீதியும் செப்பனிடப்படும்.

வடமராட்சி கிழக்கில் அம்பன் கிராமிய வைத்தியசாலை சுற்றாடலும் சிரமதான பணி மூலம் துப்புரவு செய்யப்படும்.

## கம்பு மா பயிற்சி

கம்பு மாவின் உணவுப் பயன்பாடு பற்றிய செய்முறைப் பயிற்சியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடாத்தி வருகின்றது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் வடமராட்சி கோட்ட பகுதியை உள்ளடக்கிய கிராமிய உற்பத்திக் குழுவிலிருந்து பெண்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் இப் பயிற்சியின் மூலம் வடமராட்சி கோட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு கம்பு மாவின் பயன்பாட்டை அறிமுகம் செய்வார்கள்.

### வல்வெட்டித்துறை கடற்பகுதியில்

# கடற்படைத் தாக்குதலுக்கு மூன்று மீனவர் காயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் தாக்கியதில் மூன்று மீனவர்கள் காயமடைந்தனர். (வயது 32), செல்லச்சாமி பாலகிருஷ்ணசாமி (வயது50), அருளானந்தசாமி ரகு (வயது 24) ஆகிய நான்கு மீனவர்களும் கடலில் குதித்தனர்.

## பரா வெளிச்சம்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அராலித் துறைப்பகுதிகளை நோக்கி பரா வெளிச்சக் குண்டுகளை அடிக்கடிஏவி வெளிச்சம்பாய்ச்சிக் கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 7. 45 மணியளவில் இடம் பெற்றது. (பா)

# விமானப்படைத் தளபதியின் அதிகாரங்கள் பறிப்பு

- ஹமில்டன் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைத் தளபதியான ரெறன்ஸ் குணவர்த்தனாவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவ்அதிகாரங்கள் விமானப்படையின் உப தளபதியான ஒலிவர் ரணசிங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வடக்கு, கிழக்கு பகுதிகளில் விமானத்தாக்குதல் குறித்தும் ஒலிவர் ரணசிங்காவே இறுதித் தீர்மானங்களை எடுக்க விருக்கின்றார். இவருக்கு உதவியாக கூட்டுப் படைத்தலைமையகமும், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சிறில் ரணதுங்காவும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர்வைஸ் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோவும் செயற்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த அறிவிப்பையடுத்து கூட்டுப்படைத் தலைமை, மற்றும்பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிற்கும் விமானப்படைத் தளபதிக்கும் இடையே ஏற்கனவே இருந்த சில முரண்பாடுகள் கூர்மையடைந்து இருப்பதாகவும், ரெறன்ஸ் குணவர்த்தனா கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து கூட்டுப்படைத் தலைமைத்தளபதி ஹமில்டன் வணசிங்காவுடன் நேரடியாக மோதிக் கொண்டதாகவும் தெரிய வருகிறது.


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## கூறுவிலை கோரல்

**விற்பனைக்கு:**

(அ) வாளி: 8 அங்கு 785 வாளிகள், ஈயம் பூசாத நிலையிலுள்ளன.

(ஆ) துணி; வெள்ளைப் பொலிஸ்ரர் (மாணவர்க்குகந்தவை)

(இ) வற்றல்: கத்தரி, பாகல், மரவள்ளி, மோர் மிளகாய் ஆகியன.

**வாங்குவதற்கு:**

(ஈ) பணப்பாதுகாப்புப் பேழை (SAFE): புதியது அல்லது பழையது.

விற்பனைப் பொருட்களை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம். ஒவ்வொன்றுக்கும் (அ; ஒன்றின் விலை, ஆ: மீற்றர் விலை, இ; கிலோ விலை, ஈ; ஒன்றின் விலை) கூறு விலையைக் குறிப்பிட்டு தனித்தனி கடிதத்தில் சீலிட்டு, மேற்பக்கத்தில் ''கூறுவிலை கோரல்'' என எழுதி பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ எமது காரியாலயத்தில் சேர்க்கவும். ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள்: 25-11-92 (பிற்பகல் 2-00 மணி). அன்று பிற்பகல் 4-00 மணிக்கு சீல் உடைத்துப் பரிசீலனை செய்யப்படும். கூறுவிலை அனுப்பியோர் இதில் பங்கு கொள்ளலாம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
17-11-92.

கௌரவ செயலாளர்

(சி/5418)



தொழில் நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்

## இறுதிப் பரீட்சைகள்

கல்வி ஆண்டு - 1992

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் 1992 -ம் கல்வி யாண்டு இறுதிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 1992-11-30ஆம் திகதிக்கு முன்னர்தங்கள் கல்வி நெறிப் பகுதித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு...

அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் அளித்த 30 சதவிகித சம்பள உயர்வு தனியார் துறையினருக்கும் அளிக்க முடியுமா என்பது குறித்து சம்பள நிர்ணய சபைகளுடன் தொழில் ஆணையாளர் ஜி. வீரக்கோன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றார்.

களுக்கு 30 சதவீத சம்பள உயர்வு வழங்க இருப்பதாக பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜயதுங்க நவம்பர் 4 ஆம் திகதி நடத்திய வரவு செலவுத் திட்ட உரையின் போது அறிவித்திருந்தமை தெரிந்ததே.

# சிங்கப்பூரில் இறந்த பெண் மரணத்தில் மர்மம்

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூரில் தற்கொலை செய்துகொண்டவர் என்று தெரிவிக்கப்படும் சாவகச்சேரி பகுதியைச்சேர்ந்த இளம்பெண்ணின் சடலம் பதின்மூன்று தினங்களுக்குப்பின்னர் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது.

சண்முகநாதன் லீலாவதி (வயது 20) என்பவர் கடந்த முதலாம் திகதி சிங்கப்பூரில் உள்ள பயணிகள் விடுதி நான்காம் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இளம் தமிழ்ப்பெண் சுவிட்ஸர்லாந்திலுள்ள தமிழ் வாலிபர் ஒருவருக்கு மணப்பெண்ணாக சிலமாதங்களுக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்டார்.

போலி விசா பெற்றிருந்ததாகக் கருதப்படும் இப்பெண் சிங்கப்பூரில் உள்ள பயணிகள் தங்கும் விடுதியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

போலி விசா பெற்று சிங்கப்பூர் ஊடாகச்சுவிட்ஸர்லாந்து செல்ல இப்பெண் திட்டமிட்டிருந்ததை அறிந்து பொலிஸார் அந்த விடுதியை முற்றுகையிட்டபோது இப்பெண் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகின்றபோதிலும், இந்த இளம்பெண்ணின் மரணத்தில் மர்மம் நீடிப்பதாக அறியப்பட்டது. (தி)

# கடவுளிடம் செல்லும்மகஜர்; மக்கள் பெரு வரவேற்பு

[கொழும்பு]

கடவுளிடம் கையளிக்கவென சிவப்பு நிற பெட்டியில் சிறிலங்கா எதிர்க்கட்சிகளால் எடுத்துச் செல்லப்படும் மகஜர் இருபத்திரண்டு நிலையங்களில் வைக்கப்பட்டிருந்ததாகவும் இந் நிலையங்களில் பெருமளவு மக்கள் இப் பெட்டியை வரவேற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மகஜர் செல்லும் பாதையில் அமைக்கப்பட்டிருந்த 22 நிலையங்களிலும் பெருமளவு மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றதாகவும் உணவு, சிற்றுண்டி பொருள்களை இந் நிலையங்களில் வைத்து விநியோகித்து உபசரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மனித சங்கிலி 'போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஜே வி பி ஆதரவு பயங்கரவாதிகள்'' என கொழும்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மீனவர்கள் காயமடைந்தனர். நால்வர் கடலில் குதித்தனர். இவர்களது ஒரு மடிவலையையும், மீன்களையும் கடற்படையினர் தம்வசமாக்கிக் கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம்காலை 7.30மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பிராந்தியப்பகுதியில்நடைபெற்றது

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் இரண்டு றோலரில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருக்கையில், அப்பகுதிக்கு கூட்டாகஇரண்டு கடற்படைப் படகில் கடற்படையினர் வந்தபோது ஓடமுற்பட்ட மீனவர்களை நோக்கி கடற்படையினர் சுட்டபோது தியாகராசா அருட்சிவம் (வயது 38), சிதம்பரப்பிள்ளை நடனகுமார் ளும் கடலில் குதித்தனர்.

கோபாலகிருஷ்ணன் யோகதாஸ் (வயது 24), நடனசிகாமணி தவராசா (வயது 27) பெரியதம்பி அமலநாதன் (வயது 24) ஆகிய மூன்று மீனவர்கள் கடற்படையினரால் பிடித்து வைத்து பலமாக நையப்புடைத்த பின் விடுவிக்கப்பட்டனர். இம் மூன்று மீனவர்களும் தம்முடன் எடுத்துச் சென்ற இரண்டு றோலரிலேயே வந்தடைந்தனர்.

கடலில் குதித்து செய்வதறியாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு மீனவர்களையும் உறவினர்கள் படகில் சென்று மீட்டு வந்தனர். இவர்களது ஒரு மடிவலையையும் மீன்களையும் கடற்படையினர் எடுத்துச் சென்றனர் [யோ]

---

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

சகல பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும்,

## விஷேட பொதுக்கூட்டம்

05 - 12 - 1992

மேற்படி சங்கத்தின் விஷேட பொதுக் கூட்டம் 05 - 12 - 1992 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்க தற்காலிக காரியாலய மண்டபத்தில் [அரச இயந்திர மட்கல நிலையம், சங்கானை) சங்கத் தலைவர் திரு மா. புலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தயவுசெய்து பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது குறித்தநேரத்தில் கூட்டத்திற்குச் சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மா. புலேந்திரன்
தலைவர்

ஆ. நாகராசா
செயலாளர்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

முக்கிய குறிப்பு

கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதோர் சங்கக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (சி-5416)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

தற்காலிக உதவி விரிவுரையாளர் (தாவரவியல்/ இரசாயனவியல்/ கணிதமும் புள்ளிவிபரவியலும்/ விலங்கியல்/ பௌதிகவியல்/ கணணி விஞ்ஞானம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரிய 1992- 09- 15திகதியிடப்பட்ட விளம்பரம் சம்பந்தமானது.

தற்காலிக உதவி விரிவுரையாளர் (தாவரவியல்/ இரசாயனவியல்/ கணிதமும் புள்ளிவிபரவியலும்/ விலங்கியல்/ பௌதிகவியல்/ கணணி விஞ்ஞானம்) பதவிக்கு இறுதித் தேர்வுக்கு/ விசேட பட்டதாரிக்கான தேர்வுக்கு தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்கலாம். மேற்படி பதவிக்கு ஏற்கெனவே, விண்ணப்பித்துள்ளவர்கள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை.

விண்ணப்பங்கள் யாவும் 1992. 11. 30திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ தாபனக்கிளைக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
1992. 11. 13
[சி- 5414]

---

நெறிப் பகுதித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
1992 - 11 - 16

அதிபர்.

(சி/ 5415)

---

# நினைவு கூருகின்றோம் ...
# 1992-11-18

1984-ம் ஆண்டு இதே தினத்தில் கட்டப்பராயில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7-தமிழர்கள்.

1986-ம் ஆண்டு ஆலையடி வேம்புப்பகுதியில். சிறிலங்கா விஷேட அதிரடிப்படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **தருமன்** (செம்பாப்போடி தர்மலிங்கம்- அக்கரைப்பற்று-)

1988-ம் ஆண்டு யாழ். நல்லூர்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**இளங்கோ** (இல. 4, விதானையார் வீதி, சுண்டிக்குளி- யாழ் )

1989-ம் ஆண்டு முல்லை - தண்ணீரூற்றுப்பகுதியில் இந்தியப்படை சுட்டதில் வீரச்சாவெய்திய-

**விஜய்** (யோகநாதன் ஞானசம்பந்தம்- இரத்தினபுரம்-)

1990-ம் ஆண்டு மன்னார் பகுதியில், சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ஸ்ரனி** (அன்ரன் சேவியர் - பனங்கட்டிக்கொட்டு- மன்னார்)

இதே ஆண்டு பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த-

**சண்** (ஜே. அன்சார். )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5413]

### சிந்தனைக்கு

ஒவ்வொரு நாளும் ஓர் அச்சத்தை வெல்வதற்கு துணியாதவன் வாழ்க்கையின் படிப்பினையை உணராதவன்.

ராலஃப் வால்டோ எமெர்ஸன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 18-11 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## அவசர அவசியத்தை உணர்வார்களா?

கொழும்பில் நேற்று முன்தினம் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு வீரரினால் சிறிலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ். அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டார். இலங்கையில் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகிய பின்னர் சிறிலங்கா ஆயுதப்படையில் கொல்லப்பட்ட அதி உயர் அதிகாரி இவரேயாவார்.

சிறிலங்கா கடற்படைத் தளபதி மீது இத்தாக்குதலை விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையே மேற்கொண்டது என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க ''இவ்வகையான தாக்குதல்களை விடுதலைப் புலிகளைத் தவிரவேறு எவரும் செய்திருக்க முடியாது" எனத்தெரிவித்துள்ளார். வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகளும் இவ்வாறே தெரிவிக்கின்றன.

சிறிலங்கா ஆயுதப்படையைப் பொறுத்து கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டமையானது. சுமார் மூன்று மாத காலத்திற்குள் ஏற்பட்ட இரண்டாவது பாரிய இழப்பாகும் அதாவது கடந்த ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி அராலிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளாகி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்ணா உட்பட ஒன்பது ஆயுதப் படை உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டபின்னர் நடந்த பெரிய சம்பவமாக இது இடம் பெற்றுள்ளது.

இத் தாக்குதல் சம்பவமானது கொழும்பில் 'இருதயம்' எனவர்ணிக்கப்படக் கூடிய கேந்திர முக்கியத்துவமும் பாதுகாப்பும் நிறைந்த பகுதியில் இடம் பெற்றுள்ளது. இந் நிலையானது, சிறிலங்காவில் பாதுகாப்பான பகுதி என அரசாங்கத்தினாலும், இராணுவத்தினராலும் ஓர் இடத்தை தெரிவு செய்ய முடியாத நிலை ஒன்றையும் உருவாகியுள்ளது. இக்குண்டு வெடிப்பானது கொழும்

## தமிழகத்தில் சுவாமியின் செயலை பிரதமர் ஆதரிக்கவில்லை

### - உள்துறை அமைச்சர் சவான்

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழ்நாட்டில் மேற்கொள்ளும் தனது நடவடிக்கைகளுக்கு இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவின் ஆதரவு உள்ளதாக கூறி வருகிறார். அவரின் எந்தஒரு நடவடிக்கையையும் பிரதமர் ஆதரிக்கவில்லை என மத்தியஉள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசாங்கத்தை நிலைகுலைக்கும் எந்தவொரு யோசனையையும் தாம் ஆதரிக்கவில்லை என்றும் அ.தி.மு.க.வுடனான எமது கூட்டணி மிகவும் உறுதியாகவே இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தென்மாநிலங்களில் கூட்டங்களில் கலந்து கொள்ள கடந்த வாரம் சென்னை வந்திருந்த சவான் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபை உறுப்பினராக இருப்பதற்கு தகுதியற்றவர் எனக்கோரி சுவாமி ஆளுநரிடம் கொடுத்த மகஜரை கையளிக்குமாறு தேர்தல் கமிஷன்ஆளுநரைக்கட்டாயப்படுத்த முடியுமா என நிருபர் கேட்டபோது கட்டாயப்படுத்துவது என்ற கேள்விக்கு இடமில்லை. ஆளுநரிடம் கையளிப்பட்ட மகஜர் அவரின் அதிகாரவரம்பெல்லைக்குட்பட்டதே தேவையான நடவடிக்கைக்காகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று பதிலளித்தார்.

## அமைதியை சீர் குலைக்க ஈரான் முயன்று வருகிறது

### - முபாரக் குற்றச்சாட்டு

(செய்ரோ)

அமைதியைச் சீர்குலைப்பதிலும் மத்திய கிழக்கு முழுவதும் குழப்பத்தை கட்டவிழ்த்து விடுவதற்கு ஈரான் முயன்று வருவதாகவும் அரபு இஸ்லாமிய நாடுகளின் விவகாரங்களில் ஈரான் தலையிடுவதனை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என எகிப்திய ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்லாம் பற்றியோ அல்லது அதன் போதனைகள் குறித்தோ பேசுவதற்கு ஈரானுக்கு அதிகாரம் இல்லை, ஈரான் இந்த நாடுகளின் பாதுகாவலனும் அல்ல. எகிப்தில் அடிப்படை வாதத்துக்கு ஈரான் தூபமிடுகிறது எனவும் அவர் கண்டித்துள்ளார்.

அரபு நாடுகள் எப்போதும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்து வருகின்றன. அல்லது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவின் கோரிக்கைக்கு இணங்க தனது படைகளை அனுப்பிய எகிப்திய ஜனாதிபதி, ஈரான் வளைகுடா எண்ணெய் நாடுகளைத் தாக்கினால் தாம் பதிலடி கொடுக்கத் தயார் என உறுதியளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்தீவிர வாத கிளர்ச்சியாளர்களால் அமைதியிழந்துள்ள முபாரக் இரண்டாவது தடவையாக ஈரான் மீது கண்டனக் குரல் எழுப்பியுள்ளார்.

## வளைகுடாவில் ஆயுத பெருக்கம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

வளைகுடாவில் ஆயுத பெருக்கம்ஏற்பட்டிருப்பதால், பிராந்தியத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதால் இவ் வளைகுடா நெருக்கடியைத் தணிக்க இந்தியாவை உதவுமாறு ஈரான் கோரியுள்ளது.

ஆதிக்க சக்திகள் அங்கு பெருமளவில் இராணுவ பலத்துடன் பிராந்திய நாடுகளிடையே பிளவை ஏற்படுத்தி வருவதாக அண்மையில் புதுடில்லிக்குவிஜயம் செய்திருந்த ஈரானிய வெளிநாட்டமைச்சர் அலிஅக்பர் வெலாயிட்டி இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மேலும் கடந்த ஆண்டு 10 மெகாவாட்ஸ் சக்தி அணு உலையைஇந்தியாவிடமிருந்து ஈரான் வாங்கவிரும்பியதாக இந்தியஅதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இதனைக் கோரவில்லை என ஈரானிய தூதரக அதிகாரிகள் மறுத்தனர். ஆனால் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாகவே ஈரானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பாக். அரசு தடைவிதிப்பு

(இஸ்லாமாபாத்)

இஸ்லாமாபாத்தை நோக்கி எதிர்க்கட்சியான மக்கள் ஜனநாயகக் கூட்டணி நடத்துவதற்கு உத்தேசித்திருந்த நெடும் பயணத் திட்டத்திற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான பெனாசிர் பூட்டோ தலைமையில் இந்தப் பேரணி இன்று ஆரம்பமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அரச வட்டாரங்கள் இதுபற்றி மேலும் கூறுகையில்; இத்தகையநெடும் பயணம் நடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தன.

## வெடிகுண்டு வைக்க முயற்சி லண்டன் பொலிசார் முறியடிப்பு

[லண்டன்]

லண்டனில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் பாரிய குண்டொன்றை வெடிக்கச் செய்வதற்கு ஐரிஸ் குடியரசு கெரில்லாக்களினால் தீட்டப்பட்ட சதித் திட்டம் பொலிசாரினால் முறியடிக்கப்பட்டது. ஒரு தொன் எடைகொண்ட வெடிபொருள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

லண்டனில் வருடம்தோறும் நடத்தப்படும் மேயர் பிரபுகளியாட்ட நிகழ்ச்சி ஆரம்பமாக சில மணி நேரங்கள் இருக்கும்போது குண்டு வெடிக்க வைத்து பாரிய அழிவை ஏற்படுத்த ஐரிஸ் கிளர்ச்சியாளர் எடுத்த முடிவை பொலிசார் முறியடித்ததாக அறிவிக்கப்படுகிறது. பொலிசார் இவர்கள் சென்ற வானைச் சோதனையிட்ட போது வானிற்குள் பெருந்தொகையான வெடிபொருள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன.

வட அயர்லாந்தில் இருந்து பிரிட்டனை வெளியேற்ற ஐரிஷ் கெரில்லாக்கள் முயன்று வருகின்றனர். இந்த வெடிபொருள் விவகாரம் குறித்து கெரில்லாக்கள் எதுவித கருத்தினையும் குறிப்பிடவில்லை.

கடந்த மாதம் லண்டனில் ஆங்காங்கே 16 குண்டுகள் வெடித்துள்ளன. இதற்கும் இவ் ஐ. ஆர். ஏ. கெரில்லாக்களே பொறுப்பாளிகளாவர்.

இதே வேளை நத்தார் கொண்டாட்டங்களுக்கு முன்னர் பயங்கர குண்டு வெடிப்பொன்றை ஐ ஆர். ஏ. கெரில்லாக்கள் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக, இது குறித்துப் பெல்பாஸ்டில் ராயிட்டர் செய்தி ஸ்தாபனத்திற்குகெரில்லாக்கள் அளித்துள்ள பேட்டியொன்றில் இதுபற்றிய தகலலை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மூளை செயற்பட்டா நிலையில் குழந்தை பிறந்தது

(புளொரிடா)

திடமான உடலுறுப்புக்கள் இருந்தும் மூளையின் செயற்பாடு அறவே அற்ற நிலையில் புளொரிடாவில் ஓர் குழந்தை பிறந்துள்ளது. இக்குழந்தைக்கு திரீஸா ஆன் பியர்ஸன் என பெயரிட்டிருந்த போதும் இக்குழந்தை பிறந்து பத்து தினங்கள் மட்டுமே வாழ்ந்துள்ளது.

எனினும் இக்குழந்தையின் மூளை மட்டுமே இறந்துள்ளது ஏனைய உறுப்புக்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. ஆதலால் அதன் உறுப்புக்களை வேறு குழந்தைகளுக்கு பயன்படுத்த முடியும் எனக்கோரி இக்குழந்தையின் பெற்றோர் புளொரிடா உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். குழந்தை இறந்த பின்னரும் இப் பெற்றோர் வழக்கைத் தொடர்ந்து நடாத்தினர்.

இப்படியான குழந்தைகளின் திடமான உடலுறுப்புக்களை மாற்று குழந்தைகளுக்கு பொருத்த நீதிமன்றம் அனுமதி அளிக்க வேண்டும் என கோரியிருந்தனர்.

எனினும் இயக்கப்பாடற்ற மூளையுடன் (மூளை இன்றி) பிறந்த குழந்தையின் உடலுறுப்புக்களை மற்றொரு குழந்தையின் உயிரைக்காப்பாற்ற பயன்படுத்த முடியாதென புளொரிடா உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மூளை இயங்காத ஒரு பிள்ளை முற்றாக இறந்துவிட்டதாக பிரகடனம் செய்யவும் முடியாதென நீதிமன்றம் அதன் தீர்ப்பில் தெரிவித்துள்ளது

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புப் பெறுவோர்

4 517 9 4319

## கூட்டுத்தாபன பண மோசடி 16 பேர் விசாரணையில்

(கொழும்பு)

பல கோடி ரூபா பணத்தை கூட்டுத்தாபனம் ஒன்றிலிருந்து ... வதாக இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் ''லங்காதீப'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

னாலும், இராணுவத்தினராலும் ஓர் இடத்தை தெரிவு செய்ய முடியாத நிலை ஒன்றையும் உருவாகியுள்ளது. இக்குண்டு வெடிப்பானது கொழும்பில் கூட அதிகாரிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்பண்ண வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளதாகவும், புதிய பாதுகாப்புத்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டிய அவசியத்தை தோற்றுவித்துள்ளதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை இன்றையநிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்த காலப்பகுதியானது சிறிலங்கா அரசாங்கத்தைப் பெரிதும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. அந்நிய நாட்டு முதலீட்டைக் கவர்ந்திழுக்கவும், அந்நிய நாட்டு செலாவணியை சேர்த்துக்கொள்ளவுமென திறந்த பொருளாதாரக் கொள்கையும், அதற்கேற்ப வசதிகளையும் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருந்தது அத்தோடு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க எக்ஸ்போ - 92 என்னும் கண்காட்சியையும் ஏற்பாடு செய்திருந்தது. இது தொடர்பாக 54 நாடுகளைச் சேர்ந்த 2500க்கு மேற்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களும் கொழும்பு வந்திருந்தனர்.

மேலும், பல வருடங்களின் பின் உல்லாசப் பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்து வந்தது. இந் நிலையிலேயே காலி முகத்திடலில் நட்சத்திரக் ஹோட்டல்கள் அமைந்திருந்த பகுதியில் கடற்படைத்தளபதி குண்டுத் தாக்குதலுக்குப் பலியானார். இதன் விளைவாக சிறிலங்காவில் முதலீடு செய்வது குறித்து முதலீட்டாளர்கள் குழப்பம் அடைந்துள்ளனர். மேலும் கொழும்பு வந்த உல்லாசப் பயணிகள் வெளியேறுவதோடு, வருகையும் பெரிய அளவில் பாதிக்கப்படும் என தெரிகிறது. இந் நிலையானது சிறிலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்களை வெகுவாகப் பாதிக்கும் என்பதை எவரும் கூறித் தெரியவேண்டியதில்லை.

அதாவது, சிறிலங்கா அரசாங்கம் இலங்கையின் ஒருபகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் யாவும் அமைதியான சூழலில் உள்ளதாக வெளிநாட்டவர்களை நம்ப வைக்கும் முயற்சிக்கு இத் தாக்குதலானது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை, சிறிலங்கா அரசாங்கம் தொடரும் குண்டுவெடிப்புகளுக்கு காரணமான பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகளை காணாது விட்டால் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டது போன்ற பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும். ஏனெனில் நிகழ்வுகள் இவற்றையே வலியுறுத்துவனவாகவே உள்ளன.

# கடன் மன்னிப்புப் பெறுவோர்

கரவெட்டி

1992

யா / க

மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 574 | 6. | 2590 |
| 2. | 610 | 7. | 2686 |
| 3. | 1231 | 8. | 4352 |
| 4 | 1703 | 9. | 4518 |
| 5. | 2432 | 10. | 4631 |

பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 121 | 6. | 2103 |
| 2. | 351 | 7. | 3067 |
| 3. | 432 | 8. | 3951 |
| 4. | 733 | 9. | 4182 |
| 5. | 983 | 10. | 4984 |

சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 | 6. | 1028 |
| 2. | 303 | 7. | 1784 |
| 3. | 331 | 8. | 2301 |
| 4 | 460 | 9. | 2602 |
| 5. | 623 | 10. | 2773 |

வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 140 | 6. | 925 |
| 2. | 324 | 7. | 1271 |
| 3. | 451 | 8. | 1362 |
| 4. | 502 | 9. | 1390 |
| 5. | 578 | 10. | 4125 |

ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 240 | 6. | 2841 |
| 2. | 357 | 7. | 2930 |
| 3. | 637 | 8. | 3164 |
| 4. | 1147 | 9. | 4131 |
| 5. | 1694 | 10. | 4976 |

ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1. | 28 | 6. | 1015 |
| 2. | 99 | 7. | 1447 |
| 3. | 181 | 8. | 1676 |
| 4. | 245 | 9. | 2592 |
| 5. | 931 | 10. | 4773 |

ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 91 | 6. | 1151 |
| 2. | 95 | 7. | 1890 |
| 3. | 359 | 8. | 2414 |
| 4. | 422 | 9. | 3044 |
| 5. | 844 | 10. | 3270 |

புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 21 | 6. | 601 |
| 2. | 250 | 7. | 816 |
| 3. | 266 | 8. | 2891 |
| 4. | 517 | 9 | 4319 |
| 5. | 560 | 10. | 4537 |

ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 73 | 6. | 2446 |
| 2 | 219 | 7. | 3182 |
| 3. | 269 | 8. | 4206 |
| 4. | 859 | 9. | 4234 |
| 5. | 973 | 10. | 4421 |

கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 205 | 6. | 561 |
| 2. | 232 | 7. | 2359 |
| 3. | 242 | 8. | 4302 |
| 4. | 325 | 9. | 4603 |
| 5. | 394 | 10 | 5187 |

வடமராட்சி கிழக்கு

யா. / வ.கி

1992

மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 675 | 2. | 729 |

பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 463 | 2. | 503 |

சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | 154 | 2. | 302 |

வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 | 2. | 890 |

ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 358 | 2. | 736 |

ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1. | 216 | 2. | 364 |

ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 26 | 2. | 879 |

புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 560 | 2. | 573 |

ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 786 | 2. | 875 |

கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 49 | 2. | 552 |

பருத்தித்துறை

யா /பரு.

1992

மாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 134 | 5. | 2877 |
| 2. | 402 | 6. | 3152 |
| 3. | 1534 | 7. | 3264 |
| 4. | 2346 | 8. | 3971 |

பங்குனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 97 | 5. | 3824 |
| 2. | 374 | 6. | 4235 |
| 3 | 640 | 7. | 4278 |
| 4. | 742 | 8. | 4282 |

சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | 37 | 5. | 465 |
| 2. | 73 | 6. | 3028 |
| 3. | 104 | 7 | 3031 |
| 4. | 462 | 8. | 3450 |

வைகாசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 123 | 5. | 1581 |
| 2. | 256 | 6. | 1813 |
| 3. | 506 | 7. | 2543 |
| 4. | 913 | 8. | 2939 |

ஆனி

| | | | |
|---|---|---|---|
| 1. | 127 | 5. | 398 |
| 2. | 148 | 6. | 726 |
| 3. | 279 | 7. | 902 |
| 4. | 299 | 8. | 2968 |

ஆடி

| | | | |
|---|---|---|---|
| 1. | 82 | 5. | 1458 |
| 2. | 195 | 6. | 2178 |
| 3. | 815 | 7. | 2679 |
| 4. | 1269 | 8. | 3103 |

ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1. | 35 | 5. | 671 |
| 2. | 157 | 6. | 884 |
| 3. | 457 | 7. | 976 |
| 4. | 521 | 8. | 2740 |

புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 08 | 5. | 980 |
| 2. | 533 | 6. | 3092 |
| 3. | 592 | 7. | 3348 |
| 4. | 641 | 8. | 3983 |

ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 1. | 59 | 5. | 1996 |
| 2. | 314 | 6. | 2985 |
| 3. | 389 | 7. | 3401 |
| 4. | 516 | 8. | 3660 |

கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 1. | 103 | 5. | 699 |
| 2. | 372 | 6. | 745 |
| 3. | 593 | 7. | 748 |
| 4. | 648 | 8. | 2635 |

(கொழும்பு)

பல கோடி ரூபா பணத்தை கூட்டுத்தாபனம் ஒன்றிலிருந்து மோசடி செய்த 16 பேர் கொண்ட குழுவினரை இரகசிய பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

கூட்டுத்தாபன காசோலை மூலம் கொழும்பு பிரதான வங்கி ஒன்றில் பணத்தை மாற்றிய சுமார் 16 பேரை, தாம் விசாரணை செய்து வருவதாக இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் "லங்காதீப" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

இவர்கள் கொடுத்த தகவல் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இம் மோசடியில் முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரின் தொடர்பு இருப்பதாகவும், முஸ்லிம் நாடுகளின் தொடர்பு இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கைகோர்த்து நின்று எதனை புரியவைத்தார்கள்?

**- பிரேமா கேள்வி**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட கைகோர்த்து நிற்றல் போராட்டத்தின் மூலம் மக்களுக்கு என்ன விடயத்தைப் புரிய வைத்தார்கள் என வீரப்பிட்டியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உரையாற்றும் போது கேள்வியெழுப்பினார். அவர் தொடர்ந்துபேசுகையில்; கைகோர்த்து நிற்பதன் மூலம் சக்தியை ஊட்டினார்களா? கைகோர்த்தல் என்பது உதவி அளிப்பது, இன்னொருவருக்கு கைகொடுத்தல்வலுவூட்டுவதுமாகும்,

இங்கு கைகோர்த்து நின்றவர்கள் என்ன சக்தியை மக்களுக்கு ஊட்டினார்கள் என கேள்வியெழுப்பினார்.

## தெரிவுக்குழுக் கூட்டம் உறுப்பினர்கள் அசட்டை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டங்களில் உறுப்பினர்கள் கலந்து கொள்வதில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது

கடந்த முறை தெரிவுக்குழுக் கூட்டத்திற்கு 12பேர் மட்டுமே வந்திருந்தார்கள் என்று ஒரு உறுப்பினர் கவலை தெரிவித்தார்.

## மலத்தியோன் தெளிக்காமை மலேரியா பரவக் காரணம்

**- சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

[யாழ்ப்பாணம்]

மலேரியா நோயின் தாக்கம் குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்றமைக்கு மலத்தியோன் தெளிக்கப்படாமை ஒரு காரணம் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இரத்தினசபாபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் கூறியுள்ளார். நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மலத்தியோன் மருந்து வகைகளைக் கொண்டு வருவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தடைவிதித்து இருப்பது தெரிந்ததே.

ஈழநாதம்

# சோதனை என்னும் பெயரில் பெண்கள் மீது துன்புறுத்தல்

## ராணுவத்தால் சிலர் கடத்தப்பட்டனர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் இரவு வேளைகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் இளம் பெண்கள் கடத்தப்பட்டு மானபங்கப்படுத்தப்படுவதாகவும் சிலர் காணாமல் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ஆயித்திய மலையைச் சேர்ந்த கிராம வாசிகள் குறிப்பாக இளம் பெண்கள் கடந்த சில நாட்களாக இரவு நேரத்தை காடுகளிலேயே கழித்து வருகின்றனர்.

இரவு வேளைகளில் காக்கிச் சட்டையில் பச்சை ரீசேர்ட் அணிந்து வரும் கோஷ்டியொன்று இளம் பெண்கள் இருக்கும்வீடுகளுக்குள் சென்று விசாரணை நடாத்தும் தோரணையில் அசிங்கமாக நடக்கிறார்கள். இதனாலேயே இளம் பெண்கள் இரவில் வீடுகளில் தங்க தயங்குகிறார்கள்.

கடந்த சனிக்கிழமை வீடு ஒன்றுக்குள் புகுந்த இராணுவத்தினர் இந்தினி என்ற யுவதியை இழுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக ஊரார் இராணுவ முகாமுக்குத் திரண்டபோது இராணுவ அதிகாரி மேற்படி யுவதி பற்றி எதுவும் தெரியாதென கூறியுள்ளார். எனினும் முகாமிற்கு செல்லும் பாதையில் பெண்கள் அணியும் செருப்பு ஒன்றை பொதுமக்கள் கண்டெடுத்துள்ளனர். இதனால் மேற்படி பெண்ணின் நிலை குறித்து பெற்றோர் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

## இரண்டு சிறுமிகள் நாய்கடி சிகிச்சைக்கு அனுமதி

(வடமராட்சி)

நாய்க்கடிக்குள்ளான சிறுமிகள் இருவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வரணியைச் சேர்ந்த ச. உதயகுமாரி (வயது 14), அல்வாய் வடக்கைச் சேர்ந்த மு லோஜினி (வயது 13) ஆகியோரே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ச. உதயகுமாரிக்கு ஒரு வருடத்திற்கு முன் நாய் கடித்ததாகவும் தற்போது வலிப்பு ஏற்பட்டுஅனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மு லோஜினிக்குவளர்ப்புநாய் கடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நெருப்புக்காய்ச்சலுக்கு இலக்காகி மூன்று ஆண்களும் இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (யோ)

## யாழ். தீவக கல்விக்கோட்ட மாவீரர் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவக கல்விக் கோட்டங்களின் மாவீரர் எழுச்சி விழா இன்று மாலை 3-00 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்விக் கோட்டப் பொறுப்பாளர் திரு ஆ. இதயன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் பிரதம விருந்தினராகவும், யாழ். கல்வி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், தீவகக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. புலேந்திரன், யாழ். மாவட்ட தளபதி திரு. வ செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இவ் எழுச்சி விழாவில் தீப அஞ்சலி, காவடி நடனம், அபிநயம் நாடகம், இசை மாலை போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## 3-ம் வருட விஞ்ஞானபீட மாணவர்களுக்கு

## படக்காட்சி

யாழ். பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஆதரவில் புதன்கிழமை தோறும் கலைப்பீடத்தில் அறிவியல் வீடியோப் படக் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன.

இவ்வகையில் இன்று(புதன்) பி.ப. 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் புவியியல் உயிர் வாழ்க்கை எனும் படம் காண்பிக்கப்படும். ஆர்வமுள்ளோர் அனைவரும் இப் படக்காட்சிக்கு அழைக்கப்படுகின்றனர்.

## வங்கி பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 21, 22, 23-ம் திகதிகளில் நடைபெற இருக்கும் இலங்கை வங்கியாளர் ''இடைநிலை'', ''இறுதி'' பரீட்சைகளிற்கான அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களுடைய அனுமதி அட்டைகளை குறிப்பிடப்பட்ட பிரதேச வங்கித் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்

யாழ். பாடசாலை உதைபந்தாட்டபோட்டி

## ஹென்றியரசர் கல்லூரிக்கு மேஜர்முரளி சுற்றுகிண்ணம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி 19 வயதுப் பிரிவிற்கான இறுதிப் போட்டிகள் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில நேற்றுமாலை நடைபெற்றது.

மூன்றாவது நிலைப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை தண்டனை உதைமூலம் தோற்கடித்தது.

இறுதிப்போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை 5.0 கோல்களால் தோற்கடித்தது தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்ட மேஜர் முரளி சுற்றுக்கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

மேற்படி வைபவத்தின் தலைவராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசாவும் பிரதமவிருந்தினராக வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும் தமிழீழ மேம்பாட்டுப்பேரவைத்தலைவர் திரு. வெ. இளங்குமரன் விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

## வீரச்சாவு



2ம் லெப். தம்பி

16-11-92 அன்று இளவாலையில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளி 2-ம் லெப்டினன்ட் தம்பி (சிவானு - ஐயாத்துரை தர்மலிங்கம், கிளாலி எழுதுமட்டுவாள்)வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை கத்தோலிக்க மன்றம் நடாத்

உலகமே வியக்கும் தலைவனைப்பெற்றோம்
உயிரினைக் கொடுக்கும் வீரரைப்பெற்றோம்
கலக்கமா உனக்கு, இனி எதற்கு?- வா
களத்தினில் ஆடுவோம் எடு துவக்கு

மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள், பதாதை வசனங்கள்

# பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு விவகாரம்

## நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது

(சென்னை)

இந்தியாவில் பிற்படுத்தப்பட்டோருக்காக அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு பற்றிய உச்ச நீதி மன்றத் தீர்ப்பு முக்கியமான அரசியல் கட்சிகளால் பொதுவாக வரவேற்கப்பட்டுள்ளது.

பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற மண்டேல்ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பெரும் பகுதியை உச்ச நீதிமன்றம் சரியானவை என்று ஏற்றுக் கொண்டு தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

1990இல்மண்டேல்ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எதிர்த்து நடந்த போராட்டத்தில் 300 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தார்கள். உச்ச நீதிமன்றததின் தீர்ப்பை எதிர்த்து வட நாட்டில் குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் வன் செயல்கள் நடந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென் மாநிலங்கள் இத் தீர்ப்பைப் பொதுவாக வரவேற்கின்றன. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ், தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி ஆகியோர் உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர்.

குண்டு

வெளியிட்டுள்ளது.

''சுதந்திரத்தையும் இனத்தையும் காக்க நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் முன்வர வேண்டும்'' என்றும் இதே போல் உயர் அதிகாரிகளை நாம் தொடர்ந்து இழக்க முடியாது என்றும் எனவே எல்லோரும் இணைந்து இந்தச் செய்கைக்கு முற்றுப் புள்ளி வைக்க முன்வரவேண்டும் எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிர

சபை முடிவு செய்துள்ளது.

அவசர பயணத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்திருக்கும் நியூசிலாந்து கிரிக்கட் சபையின் தலைவர் பீற்றர் மக்டோமத் நியூசிலாந்து அணி தொடர்ந்து ஆடும் என்று தெரிவித்தார்.

நியூசிலாந்து அணி தங்கியிருந்த தாஜ்சமுத்திரா ஹோட்டலுக்கு அருகில் குண்டு வெடித்தகை அடுத்து அந்த அணியினர் நேற்று முன்தினம் தமது சிறிலங்காப் போட்டிகளை ரத்துச் செய்வதாக அறிவித்திருந்தனர். அணியினர் நியூசிலாந்து திரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர்.

## அமைச்சர்கள் பா. உ. கள் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் முப்பது சதவிகித சம்பள அதிகரிப்பைப்பெற உள்ளனர்.

இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதாந்தம் பதின்நான்காயிரம் ரூபாக்களைசம்பளமாகவும், இருநூறு ரூபாக்களை பாராளுமன்ற அமர்விற்கான விசேட ஊக்குவிப்பாகவும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இந்த அதிகரித்த சம்பள உயர்வு ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும் எனவும் இதற்கான அறிவிப்பை நிதி அமைச்சரும், பிரதமருமான டி. பி. விஜயதுங்கா விரைவில் பாராளுமன்றத்தில் வெளியிடுவார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை இந்த சம்பள அதிகரிப்பு பாராளுமன்றத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் வழங்கப்பட இருக்கின்றது.

6954 பட்டதாரி

பின்தங்கிய பகுதிகளில் ஏற்பட்ட ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

இப் பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்கள் சேவைக்கு அமர்த்தப்படும் போது 2050ரூபா மாதாந்த வேதனமாக வழங்கப்படும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# வேலை வாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

[அ] 1. மோட்டார் வாகன தொழில் நுட்பப் போதனாசிரியர்
(Motor Vehicle Technology)

## மாணவர்களுக்கு

யாழ். பல்கலைக்கழக 3-ம் வருட விஞ்ஞான பீட மாணவர்களை 20-11-92 (வெள்ளி) மாலை 4-00 மணிக்கு வளாகத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

3ஆம் வருட மாணவர்கள்

(3656)

---

# மரண அறிவித்தல்

## திருமதி

## நடராசா கோணேஸ்வரி

மண்டை தீவைச் சேர்ந்த திருமதி நடராசா கோணேஸ்வரி 16-11-92 இல் நவாலியில் காலமானார். இவர் திரு. நடராசாவின் அன்புமனைவியும், லலிதா, வரதன் (கனடா), ரஞ்சினி, கலைவாணி, தேவி, சுசி, யமுனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாநாயகம், தவராசா, தனேஸ்வரி, மயில்வாகனம், இரட்னேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 18-11-92 (இன்று) மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

நவாலி வடக்கு,
நவாலி. (3658)

இ. இரட்னேஸ்வரன்

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 17-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6716

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

25-3736, 27-6583, 24-5137, 28-0429, 36-2837, 22-4423, 28-0587, 43-1019, 24-5887, 41-4194, 26-6475, 27-1128, 26-5493, 26-1098, 24-6065

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

24-5454, 24-4238, 24-2545, 24-0878, 24-9825, 26-1724, 26-5157, 26-7187, 26-4323, 26-5351, 26-5604, 26-1019, 28-9927, 42-3924, 40-4429

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

### வன்னி

நகர்பகுதி முழுவதும் கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தின் துரித முயற்சியினால் வீதிகள் துப்புரவாக்கப்பட்டு கம்பங்கள் நடப்பட்டுமின்விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகிறது. அத்துடன் கிளிநொச்சி டிப்போச சந்தியில்இருந்து மாவீரர்கள் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் வழிஓரங்கள் முழுவதும் கம்பங்கள் நாட்டப்பட்டு வீதி வளைவுகளை அமைப்பதற்குரிய ஆயத்த வேலைகள் துரிதகதியில் நடை பெற்று வருகின்றது.

அத்துடன் செயலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள்போன்றவற்றின் முன்னால் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு ஆயத்தமாக நீண்ட கம்பங்கள் நிறுத்தப்பட்டு அதன் கீழ்பகுதி மிகவும் அழகாக அமைக்கப்பட்டு காணப்படுகின்றது.

கிராமங்கள் தோறும் மாவீரர்களின் பெயரில் உள்ள வீதிகளை துப்புரவு செய்தல், மாவீரர்களின் பெயரில் உள்ள விளையாட்டு மைதானங்களை துப்புரவு செய்தல் போன்ற பணிகளும் நடைபெற்று வருவதுடன் மாவீரர்களின் நினைவையொட்டி மரநடுகையினையும் மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (16)

### 2 வேங்கைகள்

முல்லைத்தீவு) எனும் போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

பலாலி ஆசிரிய கலாசாலை கத்தோலிக்க மன்றம் நடாத்தும் ஒளி விழா இன்று காலை 8.30 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கத்தோலிக்க மன்றத் தலைவர் திரு. எட்வேட் பங்கிராஸ் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி ஒளி விழாவில் பிரதம விருந்தினராக புனிதசவேரியார் உயர் குருமட அதிபர் அருட்கலாநிதி எஸ் கே இமானுவேல் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

### தளபதிகளின்

தடைவிதிக்கப்படும் என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தளபதிகள் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மெய்ப்பாதுகாவலர்கள், மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தொகை அதிகரிக்கப்படும்.

இதனால் சில சுதந்திரங்களை தளபதிகள், உயர் அதிகாரிகள் பெறுவதில் தடங்கல் ஏற்படலாம். ஆனால் நாட்டினதும் இனத்தினதும் நன்மைக்காக அவற்றை தியாகம் செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இராணுவ

னது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது இதன் காரணமாகவே மேற்படி உயர் இராணுவ அதிகாரியை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

### மணலாற்றில்

தல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

### கடற்படையினர்

கொண்டிருக்கையில் முனைப் பகுதியில் மீனவர்களை நோக்கிச் சுட்டதில் மீனவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். (யோ)

---

[அ] 1. மோட்டார் வாகன தொழில் நுட்பப் போதனாசிரியர் (Motor Vehicle Technology)
2. வேலைத்தள தொழில் நுட்பப் போதனாசிரியர் (Work Shop Technology)
3. ஒட்டுவேலை தொழில்நுட்பப் போதனாசிரியர் (Welding Technology)
4, மோட்டார் வாகன ஆய்வுகூடப் பொறுப்பாளர் (Motor Vehicle Lab Assistant)
5. வேலைத்தள ஆய்வுகூடப் பொறுப்பாளர் (Machine Shop Lab Assistant)
6. ஒட்டுவேலை ஆய்வுகூடப் பொறுப்பாளர் (Welding Lab Assistant)
7. பொறிமுறை வரைதல் போதனாசிரியர் (Drawing Instructor)
8. பெயின்ரிங் போதனாசிரியர் / ஆய்வுகூடப் பொறுப்பாளர் (Painting and Surface Coating Instructor)

**தகைமைகள்:**

★ 50 வயதுக்கு மேற்படாமலும், சுகதேகியாகவும், திடகாத்திரமாகவும் இருத்தல் வேண்டும்.
★ N D T / N C.T / N.A.B இல் பொறியியல்துறையில் தேர்ச்சி அல்லது சமமான தொழில் அனுபவம்.
★ ஆசிரியத்துறையில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.

[ஆ] 1. ஆங்கில ஆசிரியர் 2. கணித ஆசிரியர்

**தகைமைகள்:**

★ க. பொ. த (உ/த) இல் சித்தி.
★ தொழில்நுட்ப துறைக்குரிய ஆங்கிலம் / கணிததுறையில் விசேட டிப்ளோமா பயிற்சி
★ ஆசிரியத்துறையில் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

[இ] லிகிதர்

**தகைமைகள்:**

★ க. பொ. த (உ/த) இல் சித்தி.
★ தமிழ்/ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சி.
★ ஆங்கில அறிவில் திறமையாக இருத்தல் வேண்டும்.

**இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25-11-92**

முகவரி;

விளம்பர இலக்கம்: 177,

**மே/பா ஈழநாதம்,**

31, மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்

(3657)

---

## பரம்பரை தந்த பயன்தருமரங்கள்
## மாண்புடனே வாழ்த்தி வளர்த்திருவோம்